அறிக்கை

1. மழை பெய்த விவரம்

2012 ஆம் ஆண்டில் இயல்பாகத் தமிழகத்திற்குக் கிடைக்கும் மழையளவான 920.9 மி.மீட்டரில் 711.9 மி. மீட்டர் மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பெற்ற மழை அளவு 739.8 மி. மீட்டர் ஆகும். இது எதிர்பார்க்கப்பட்ட சராசரி ஆண்டு மழைப் பொழிவைவிட 20 விழுக்காடு பற்றாக்குறையாகும்.

2014 ஆம் ஆண்டில் 14–7–2014 வரை இயல்பாகத் தமிழகத்திற்குக் கிடைக்கும் மழையளவான 233.7 மி. மீட்டரில் இதுவரை பெய்த மழை அளவு சராசரியாக 250.3 மி.மீட்டர்.

2. நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்த விவரம்

நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறைவாகவே உள்ளது. உதாரணமாக மேட்டூர் அணையின் மொத்தக் கொள்ளளவான 93,470 கன அடியில் கடந்த ஆண்டு 10–7–2013 அன்றைய நிலவரப்படி 26,470 கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரை 16,413 கன அடி உள்ளது. அதேபோல் பவானிசாகர் அணையின் கொள்ளளவான 32,800 கன அடியில் கடந்த ஆண்டு 8,229 கன அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 10–7–2014 வரை 3,406 கன அடியாக உள்ளது. பெரியாறு அணையின் மொத்தக் கொள்ளளவான 10,570 கன அடியில் கடந்த ஆண்டு 3,380 கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரை 1,360 கன அடி உள்ளது. அதேபோல், வைகை அணையின் கொள்ளளவான 6,091 கன அடியில் கடந்த ஆண்டு 1,579 கன அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 10–7–2014 வரை 230 கன அடியாக உள்ளது.

3. கடந்த ஆண்டில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழகத்தில் கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களுக்கு அரசாணை (நிலை) எண் 48, வருவாய், நாள் 13–2–2013 இல் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மற்றும் பயிரிழப்பிற்காக ரூ.608.75 கோடியும் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு அரசாணை (நிலை) எண் 123, வருவாய், நாள் 25–4–2013 இல் ரூ.1,004.86 கோடியும், ஆக மொத்தம் ரூ.1,613.61 கோடி மாண்புமிகு

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

முதலமைச்சர் அவர்களால் குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்கவும் மற்றும் பயிரிழப்பிற்காக விவசாயிகளுக்கு நிவாரணமாகவும் வழங்கப்பட்டது.

4. 2014 ஆம் ஆண்டில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

(i) கடந்த ஆண்டில் மொத்த மழை அளவில் 20 சதவீதம் குறைபாடு ஏற்பட்டுள்ளதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டுவரும் இந்த அரசு தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளித்திட முழுமையாக முனைந்துள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை, கால்நடைத் தீவனத் தட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றியும், அதைச் சமாளிக்கத் தேவையான நிதி ஆதாரங்கள் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காகவும், 681.53 கோடி ரூபாய் அளவிலான நிவாரணத் தொகுப்பை அரசு வழங்கியது. இதில் 189.16 கோடி ரூபாய் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், 492.37 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளிடம் உள்ள நிதியிலிருந்தும், செயல்முறையில் உள்ள திட்டங்களிலிருந்தும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்த அரசாணை (நிலை) எண் 89, வருவாய், நாள் 24-2-2014-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டது:

வ. எண்	**துறை**	**மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)**
	12 மாவட்டங்கள் (சென்னை உட்பட)	
1.	ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை	42.45
2.	தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்	13.65
3.	சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (சென்னை மட்டும்)	50.00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4.	நகராட்சி நிருவாகம்	50.87
5.	பேரூராட்சிகள்	16.19
	ஏனைய 20 மாவட்டங்கள்	
	ஏனைய 20 மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சங்கள் வீதம் (மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில்)	10.00
	கால்நடை பராமரிப்பு	
	கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்க கால்நடை பராமரிப்புத் துறைக்கு (மாநிலம் முழுமைக்கும்)	6.00
	மொத்தம்	**189.16**

வ. எண்	**துறை**		**திட்ட நிதி/ பொது நிதி (ரூபாய் கோடியில்)**
	கடுமையாக குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் 12 மாவட்டங்கள் (சென்னை உட்பட)		
1.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சிகள்	16.07
		தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்	
		சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்	
2.	ஊரக வளர்ச்சித் துறை		184.13

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

	கூட்டுத் தொகை		200.20
	ஏனைய 20 மாவட்டங்களுக்கு		
3.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை	நகராட்சி நிருவாகம்	68.61
		பேரூராட்சிகள்	14.34
		தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (மாநிலம் முழுமைக்கும்)	54.25
		ஊரக வளர்ச்சித் துறை	154.97
	கூட்டுத் தொகை		292.17
4.	குடிநீர் வழங்கலுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை		492.37
		மொத்தம்	**492.37**

(ii) நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண் தொழிலை ஊக்குவிப்பதிலும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழகத்தில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 6–6–2014 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு 19 விழுக்காடு அளவுக்கு மழை குறைவாகப் பெய்த போதிலும், மண் வளத்தை மேம்படுத்தியதன்மூலமும், நவீன உத்திகளைக் கையாண்டதன்மூலமும், தேவையான விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவற்றை இருப்பில் வைத்து உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளித்ததன்மூலமும், இதுவரை இல்லாத சாதனை அளவாக 103.38 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.